**வாக்குமூலம்**
**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**வழக்கு எண். SC 69/2020**
**வழக்கு சாட்சி PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணன் | ஜாதி | : | பைரா |
| தந்தை பெயர் | : | எல்லப்பன் | தொழில் | : | ஜோதிடம் |
| கிராமம் | : | சேவூர் | சமயம் | : | இந்து |
| தாலுக்கா | : | காட்பாடி | வயது | : | 40 |

**(எதிரி ஆஜர் )**

**தேதி 14.06.2023**

**முதல் விசாரணை**

நான் காட்பாடி தாலுக்கா சேவூர் என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கைரேகை பார்த்து ஜோசியம் சொல்லும் வேலை செய்கிறேன். வழக்கில் இறந்துபோன தனலட்சுமி என் தங்கை ஆவார். ஆஜர் எதிரி என் தங்கையின் கணவர் ஆவார். எதிரி அம்மூர் அருகில் உள்ள நரசிங்கபுரத்தில் வசித்து வருகிறார். அவர் மேஸ்திரி வேலை செய்கிறார். எனது தங்கை தனலட்சுமியை 30.06.2017 ம் தேதி எதிரிக்கு திருமணம் செய்து வைத்தேன். எனது தங்கைக்கு பவித்ரா என்ற பெண் குழந்தை உள்ளது. நான் திருப்பத்துார் பக்கத்தில் மணவாள நகர் கிராமத்தில் இருந்தேன். நான் அங்கு வேலையை முடித்துவிட்டு படுத்து துாங்கிகொண்டிருந்தபோது 18.09.2019 ம் தேதி நரசிங்கபுரம் எதிரி வீட்டிற்கு அருகில் உள்ள என் சித்தப்பா மகன் மார்கபந்து போன் மூலம் விடியற்காலை 5 மணிக்கு எனது தங்கை இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். அதன் பிறகு நான் சேவூருக்கு வந்து இருசக்கர வாகனம் எடுத்துக்கொண்டு நரசிங்கபுரத்தில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது எனது தங்கையை பாயில் படுக்க வைத்திருந்தார்கள். அப்போது போலீசார் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். போலீசார் என்னிடம் அந்த பெண்ணுக்கு சொந்தக்காரர் யார் என்று கேட்டார். நான் தனலட்சுமி எனது தங்கை என்று சொன்னேன். பிறகு இராணிப்பேட்டை காவல் நிலையத்திற்கு வந்து 18.09.2019 ம் தேதி எதிரி

எனது தங்கையை கொலை செய்துவிட்டதாக புகார் எழுதி கொடுத்தேன். நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். அதன் பிறகு என் தங்கையை பிரேத பரிசோதனை செய்து வாலாஜா அரசு மருத்துவமனையில் கொடுப்பார்கள் என்பதால் நான் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதன் பிறகு இராணிப்பேட்டை சப்–கலெக்டர் அவர்கள் வாலாஜா அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள். என் தங்கையை யாரோ கொலை செய்துவிட்டதாக சொன்னோன். நான் எனது தங்கையை அடக்கம் செய்துவிட்டு வீட்டிற்கு சென்று விட்டேன். 21.09.2019 ம் தேதி போலீசார் என்னை சம்பவம் நடந்த நரசிங்கபுரத்தில் உள்ள எதிரி வீட்டினிடம் வரச்சொன்னார்கள். அங்கு போலீசார் இருந்தார்கள். எதிரி செல்வம் வாக்குமூலம் கொடுத்ததாக சொன்னார். 17.09.2019 ம் தேதி எதிரி செல்வம் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்தபோது எனது தங்கை தனலட்சுமி வீட்டிற்கு முன்பு வெளியில் படுத்துக்கொண்டிருந்தபோது எனது தங்கையின் புடவை விலகியிருந்தது பார்த்து எனது தங்கையை உள்ளே அழைத்து சென்று எதிரி எனது தங்கையை கையால் அடித்ததில் எனது தங்கை தடுமாறி பீரோவின் கைப்பிடி மீது விழுந்து அவருக்கு நெற்றியில் அடிப்பட்டு கீழே செங்கல் மீது விழுந்த எனது தங்கை எழுந்திருக்கவில்லை. அதன் பிறகு எதிரி செல்வம் தண்ணீர் தெளித்து பார்த்தும் தங்கை எழுந்துக்கொள்ளவில்லை. அதனால் எதிரி என் தங்கையின் வேறு ஒரு புடவையை எடுத்து என் தங்கையின் கழுத்தில் கட்டி பேன் மாட்டும் கொக்கியில் கட்டிவிட்டு புடவையின் மற்றொரு முனையை கூரைவீட்டின் பரணையில் கட்டிவிட்டு அதன் பிறகு வேலைக்கு போவதாக அவருடைய குழந்தை பவித்ராவை எதிரியின் அண்ணன் முருகனிடம் விட்டுவிட்டு எதிரி வேலைக்கு போய்விட்டதாக வாக்குமூலம் எதிரி கொடுத்ததாக தெரிந்துகொண்டேன். இது சம்மந்தமாக போலீசார், டி எஸ் பி மற்றும் சப்–கலெக்டர் ஆகியோர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கைரேகை ஜோசியம் பார்க்கிறேன். நான் ஊர் ஊராக சென்று 4, 5

நாட்கள் தங்கியிருந்து கைரேகை ஜோசியம் பார்ப்பேன். எனக்கு காலை 5 மணிக்கு போன் வந்தது. நான் திருப்பத்தூரில் இருந்து என் வீட்டிற்கு காலை 9 மணி ஆகிவிட்டது. நான் அங்கிருந்து நரசிங்கபுரத்திற்கு வருவதற்கு காலை 10 மணி முதல் 10.30 மணி ஆகிவிட்டது. நான் அங்கு வரும் போது போலீசார் அங்கு இருந்தார்கள். எனது சகோதரி இறந்த விவரம் தெரிந்து தான் போலீசார் அங்கு இருந்தார்கள். நான் போலீசாரிடம் அவர்களுக்கு யார் தகவல் சொன்னது என்று கேட்கவில்லை. எங்கள் ஊர்த்தலைவர் போலீசாருக்கு போன் தகவல் சொன்னாரா என்று எனக்கு தெரியாது. நான் எதிரி வீட்டிற்கு சென்றபோது அங்கு நிறைய போலீசார்கள் மற்றும் ஜனங்களும் இருந்தார்கள். என்னை போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றபோது காலை 11.00 மணி இருக்கும். அந்த புகாரை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று என்னிடம் படித்துகாட்டவில்லை. போலீசார் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். எனக்கு பெயர் மட்டும் தான் எழுதத்தெரியும். மற்ற படி எனக்கு எழுதபடிக்க தெரியாது. 21.09.2019ம் தேதி காலை 7 மணி அளவில் எதிரி வீட்டினிடம் நான், எனது மனைவி ஆகியோர் சென்றோம். அப்போது எதிரி அங்கு இருந்தார். போலீசார் எதிரியை விசாரித்தார்கள். எனது தங்கையை எதிரி கழுத்தில் கட்டி மின்விசிறியில் தொங்கவிட்டு புடவையின் ஒரு பகுதியை பரணில் கட்டியதாக நான் குறிப்பிட்டுள்ளது அப்போது எதிரி போலீசாரிடம் சொன்ன சங்கதியாகும். நான் குறிப்பிடுவது போல் எதிரி போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றும் அதனால் என் தங்கை இறக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தங்கை என்னிடம் நன்றாக பேசுவார். நான் எதிரியிடம் எனது தங்கை உயிருடன் இருக்கும் போது எப்போதாவது பேசுவேன். எதிரிக்கும் எனது தங்கைக்கும் அடிக்கடி பிரச்சனை வருவதை சமாதானப்படுத்துவதற்காக பேசுவேன். நான் இதற்கு முன்பு எதிரி மீது எனது தங்கையிடம் பிரச்சனை செய்ததது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அதுபோல் எனது தங்கையும் எதிரி மீது

பிரச்சனை செய்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எதிரியும் எனது தங்கையும் சண்டை போட்டுக்கொள்வார்கள் என்று விவரத்தை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் ஆகி 1 1/2 வருடத்திற்குள் அவர்களுக்குள் குழந்தை பிறந்துவிட்டது. எனது தங்கை இறந்த சமயத்தில் 4 மாதம் கர்ப்பமாக இருந்தாள். எனதுதங்கை மேற்படி கருவை கலைப்பதற்கு எதிரியிடம் கேட்டதற்கு எதிரி ஒத்துவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே எனது தங்கை தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றும் நான் முதல் விசாரணையில் சொல்லியது பொய் என்றால் சரியல்ல. என் தங்கையின் குழந்தை தற்போது எதிரியிடம் தான் உள்ளது. போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH

**வாக்குமூலம்**
**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**வழக்கு எண். SC 69/2020**
**வழக்கு சாட்சி PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மார்கபந்து | ஜாதி | : | பைரா |
| தந்தை பெயர் | : | விநாயகம் | தொழில் | : | பெயிண்டர் |
| கிராமம் | : | நரசிங்கபுரம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | வாலாஜா | வயது | : | 29 |

**<u>(எதிரி ஆஜர் )</u>**

**<u>தேதி 14.06.2023</u>**

**முதல் விசாரணை**

நான் நரசிங்கபுரத்தில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்துவருகிறேன். அ.சா.1 அண்ணன் முறை ஆகும். இறந்துபோன தனலட்சுமி தங்கை முறை ஆகும். ஆஜர் எதிரி தனலட்சுமியின் கணவர் ஆவார். 18.09.2019 ம் தேதி எனக்கு காலை 4 மணிக்கு நான் என் வீட்டில் படுத்துகொண்டு துாங்கிகொண்டிருந்தபோது அக்கம் பக்கத்தில் உள்ள நபர்கள் தனலட்சுமி துாக்குபோட்டு கொண்டிருப்பதாக தகவல் தெரிந்து நான் என் வீட்டில் சுமார் 1/2 கி மீ தொலைவில் உள்ள தனலட்சுமியின் வீட்டிற்கு ஓடிப்போனேன். அங்கு சென்று பார்த்தபோது தனலட்சுமியை கீழே படுக்கவைத்து போர்வை போட்டு போர்த்தியிருந்தார்கள். நான் எதிரி செல்வம் எங்கே என்று கேட்டபோது எதிரி வேலைக்கு சென்றுவிட்டதாக சொன்னார்கள். நான் செல்வதற்குள் அக்கம் பக்கத்தில் உள்ள சுமார் 15 நபர்கள் கூடிவிட்டார்கள். நான் அங்கிருந்து அ.சா.1 க்கு போன் மூலம் தனலட்சுமி இறந்துவிட்டதாக சொன்னேன். அதன் பிறகு அங்கு வந்தார். பிறகு இராணிப்பேட்டை காவல் நிலையத்திற்கு காலை 10 மணியளவில் வந்தேன். காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் கேட்டபோது எதிரி காஞ்சிபுரத்திலிருந்து வந்ததாக பஸ் டிக்கட்டை போலீசாரிடம் காட்டினார். அதன் பிறகு போலீசார் இறந்துபோன தனலட்சுமியின உடலை

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் வாலாஜா மருத்துவமனையில் இருக்கும் போது இராணிப்பேட்டை சப் கலெக்டர் அ.சா.1 ஐ விசாரித்தார். 22.09.2019 ம் தேதி போலீசார் 4, 5 பேர்கள் வந்து எதிரியிடம் அவர் வீட்டருகில் வைத்து விசாரித்தார்கள். எதிரி அதற்கு தனலட்சுமியின் துணி விலகி இருந்ததை கேட்டதில் சண்டை வந்ததில் நான் ஒரு அடி அடித்ததில் பீரோ கைப்பிடி மீது விழுந்து பிறகு தரையில் இருந்த செங்கல் மீது விழுந்து விட்டார் என்றும் பார்த்த போது தனலட்சுமி இறந்துவிட்டதாகவும் தனலட்சுமியின் கழுத்தில் தூக்கு போட்டு கூரைவீட்டின் மோட்டு கொம்பில் தூக்கு போட்டு விட்டு பக்கத்தில் இருந்த சைடு கொம்பில் கட்டிவிட்டதாக எதிரி சொன்னார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு காலை 4 மணிக்கு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் சொல்லி தனலட்சுமி இறந்த விவரம் தெரிந்தது. நான் சுமார் காலை 4.10 மணியளவில் எதிரி வீட்டிற்கு சென்றுவிட்டேன். அந்த அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் யார் என்று குறிப்பிட்டு என்னால் சொல்ல இயலாது. நான் சென்றபோது தனலட்சுமியின் உடலை வீட்டின் உள்ளே படுக்கபோட்டு போர்வை போர்த்தி வைத்திருந்தார்கள். அப்போது அங்கு நிறைய ஜனங்கள்வீடடிற்கு உள்ளேயும் வெளியிலும் இருந்தார்கள். சொந்தக்காரர்கள் மற்றும் தெரிந்த நபர்கள் சடலத்தை வந்து பார்த்து சென்று கொண்டிருந்தார்கள். போலீசார் சம்பவ நடந்த வீட்டிற்கு காலை 11 மணியளவில் வந்தார்கள். அதற்கு முன்பு போலீசார் வரவில்லை. பிணத்தை இறக்கிய நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு அ.சா.1 அழைத்ததன் பேரில் நான் உடன் சென்றேன். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அதன் பிறகு தான் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். நான் காலை 4.10 மணிக்கு செல்லும் போது அங்கு எதிரி இல்லை. சம்பவம் நடந்த அன்று எதிரியை காலை 7.30 மணியிலிருந்து 8 மணிக்கு அவருடைய வீட்டில் வைத்து பார்த்தேன். எதிரிக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. நான் காலை

4.10 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றபோது அ.சா.1 அங்கு வரும் வரை நான் தொடர்ச்சியாக அங்கு இருக்கவில்லை. என் வீட்டிற்கு போய் விட்டு வந்தேன். இறந்துபோன தனலட்சுமி எனக்கு சொந்தக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த பஸ் டிக்கட்டை போலீசார் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றும் தனலட்சுமி தான் தூக்கு மாட்டி தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH